**06. 06. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புத்தாக்கம், தொழில்முனைவோர், உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா சிறந்து விளங்குவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. பிம்ஸ்டெக் நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரிப்பதில் இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. நார்வே செஸ் தொடரில் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. நீலகிரி, தேனி, திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

5. சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிப் போட்டியில் அனிரூத் சந்திரசேகர், ஜப்பான் இணை இன்று களமிறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார சக்தியாக இந்தியா திகழ்வதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2025-26-ம் நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் 7.7 சதவிகிதமாக அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் பொருளாதார வளர்ச்சியுடன் ஸ்திரத்தன்மை மற்றும் நீடித்த நம்பகத்தன்மையே இதற்கு சாத்தியமானதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையில் தேச கட்டமைப்பு, புத்தாக்கம், தொழில்முனைவோர், உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகளாவிய சாவல்களை எதிர்கொண்டு இந்தியா சிறந்து விளங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

140 கோடி இந்தியர்களின் எதிர்பார்ப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

பிம்ஸ்டெக்

பிம்ஸ்டெக் நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரிப்பதில் இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில், இந்தியா, பங்களாதேஷ், மியான்மர் நாடுகளை உள்ளடக்கிய பிம்ஸ்டெக், வங்காள விரிகுடா பிராந்தியத்தில் பரவலாக்கப்பட்ட வளம், ஒருங்கிணைப்பு, மீட்சிமை நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

இந்நாளையொட்டி பிம்ஸ்டெக் பாரம்பரிய இசை திருவிழாவை அமைச்சா புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

இந்த இசை விழாவில் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து நாடுகள் பங்கேற்கின்றன.

இதனிடையே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.ஜெய்சங்கர் நேபாள் வெளியுறவு அமைச்சர் ஷிசில் கனாலுடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பரஸ்பர நலன் சார்ந்த விசயங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖

My Bharath Youth Convention

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கிற்கான இளம் சாதனையாளர்களின் பயணங்களை அங்கிகரிக்கும் My Bharath Youth Convention 2026 புதுதில்லியில் இன்று தொடங்கியது.

தேச கட்டமைப்பிற்கான திறமையான தீர்வுகளை உருவாக்கும் வகையில் நடைபெறும் இந்த இயக்கத்தில் நாடுமுழுவதிலும் உள்ள இளம் சாதனையாளர்கள் பங்கேற்க உள்ளனர்

சிறந்த சமூகத்தின் மூலம் வளர்ச்சியடைந்த தேசம் மற்றும் மேம்பட்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஆக்கப்பூர்வமான வழிமுறைகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖

ராணுவ ஒத்துழைப்பு

இந்தியா அமெரிக்கா இடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான 29-ம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஹவாயில் நடைபெற்றன.

இருநாட்டு ராணுவ உயரதிகாரிகள் பங்கேற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பரஸ்பர பாதுகாப்பு நலனை உறுதி செய்வதில் அறிவுசார் திறன்களை பரிமாறிக் கொள்வது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

வரும் காலங்களில் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து உள்ளதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

பத்ம விருது

2027-ம் ஆண்டிற்கான பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை அடுத்தமாதம் 31-ம் தேதிவரை மத்திய உள்துறை அமைச்சகம் நீட்டித்துள்ளது.

ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளம் வாயிலாக இதற்கு விண்ணப்பிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

எபோலா

எபோலா அச்சுறுத்தல் காரணமாக ஆப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டவர்கள் 21 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவதாக மொரீஷியஸ் அறிவித்துள்ளது.

மேலும் காங்கோ, உகாண்டா, தெற்கு சூடான் நாடுகளில் பயணம் மேற்கொண்டவர்கள் மொரீஷியசிற்கு வர தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் மொரீஷியசில் நடைபெறவிருந்து அமெரிக்க, ஆப்பிரிக்க வர்த்தக உச்சிமாநாடும் ஒத்திவைக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நார்வே செஸ் 2026 தொடரில் நடப்பு சாம்பியன் மேக்னஸ் கார்ல்சனை வென்று தமிழக வீரர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

ஆஸ்லோவில் நடைபெற்ற இத்தொடரில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் முதலமைச்சர் வெளியிட்ட செய்தியில் இந்த சாதனையின் மூலம் தமிழகத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள பிரக்ஞானந்தா, மேலும் பல புதிய சாதனைகளை படைத்திட வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

பிரதமரும், பி.ஜே.பி. மூத்த தலைவருமான திரு. நரேந்திர மோடியின் தலைமையில் தேசிய மற்றும் மாநில அளவில் பி.ஜே.பி. சிறப்பாக செயல்படுவதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு. அண்ணாமலை விலகியதால் பி.ஜே.பிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றார்.

❖❖❖❖❖❖❖❖

தீ பாதுகாப்பு

தீ பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்களிலும் இன்றும், நாளையும் இதுதொடர்பான பயிற்சி நடைபெற உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், திருவெறும்பூர், லால்குடி உள்ளிட்ட 11 தீயணைப்பு நிலையங்களில் தீ தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தீயணைப்பு கருவிகள் உபயோகிக்கும் முறை, மின்சார தீ விபத்து உள்ளிட்டவற்றிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வது பற்றிய சிறப்பு பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் அளிக்கப்படுவதாக தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அதிக விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதப்படும் இடங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் தொடர்பாக ஆட்சித்தலைவர் திருமதி. சரண்யா அரி இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

சேலம் மாநகர பகுதிகளில் கடந்த ஓராண்டில் போதைப்பொருள் விற்பனை செய்த 79 பேர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாக மாநகர காவல் ஆணையர் திரு. அனில்குமார் கிரி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும்

தீமைகளை எடுத்துரைக்கும் வகையில் கல்லூரி மாணாக்கர் இடையே காவல்துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>விழுப்புரம்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய அரசின் ஊரக வாழ்வாதார வேலை உறுதி திட்டத்தின் கீழ் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட தனிநபர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖

<u>நீலகிரி</u>

நீலகிரி, தேனி, திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

கன்னியாகுமரி, கோவை திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, திருப்பூர், விருதுநகர் மாவட்டங்களிலும் மழைபெய்யக்கூடும் என அம்மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய நிலையில் உதகை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

எமரால்டு, நஞ்சநாடு, முத்தொரை உள்ளிட்ட இடங்களில் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி சந்தையில் மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் சார்பில் வழங்கப்படும் தனிநபர் கடன், சயஉதவிக்குழுக்களுக்கான சிறுதொழில் கடன் உள்ளிட்ட திட்டங்களுக்கு அரியலூர் மாவட்டத்தை சேர்ந்தோர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. மிருணாளினி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரதமரின் தேசிய திறன்பயிற்சி சேர்க்கை முகாம் வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் அஞ்சல் துறை குறைதீர்நாள் கூட்டம் வரும் 24-ம் தேதி நடைபெற உள்ளது.

பெரம்பலூர் கோட்டத்திற்கு உட்பட்ட மின் நுகர்வோர் குறைதீர்நாள் கூட்டம் வரும் 9-ம் தேதி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பர்மிங்ஹாமில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிப்போட்டியில் இந்தியாவின் அனிரூத் சந்திரசேகர், ஜப்பானின் யூசுக்கி இணை – இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

கோவாவில் நடைபெறும் தெற்காசிய மகளிர் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இதுவரை 5 முறை இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஜப்பானில் நடைபெறும் 18 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி இறுதி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

நியூ சண்டிகரில் ஆப்கானிஸ்தானிற்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 2 விக்கெட் இழப்பிற்கு
191 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖